

# பரலோக பொக்கிஷங்கள்

*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*

## துன்பத்திலும் 'எப்போதும் சந்தோஷமாயிருப்பது' நம் சுதந்திரம்

'கர்த்தருக்குள்' தங்கள் சந்தோஷத்தை வைத்தவர்கள் மாத்திரமே, 'எப்பொழுதும்' அல்லது ..... 'நிரந்தரமாய்' சந்தோஷமாயிருப்பார்கள்! (பிலி.4:4). இதற்கு மாறாக, வேறு எதன் மீதும் அல்லது எவர் மீதும் கொண்டிருக்கும் சந்தோஷம் ஒருபோதும் நிரந்தரமாய் இருப்பதில்லை. இயேசு தன் பிதாவின் மீது கொண்டிருந்த சந்தோஷத்தை, அந்த 'நித்திய பேரின்பத்தை' எக்காலத்தும் இழக்கவில்லை! (சங்.16:11).

அதற்காகவே, பிதாவின்மீது வைத்திருந்த சந்தோஷத்தை நிரந்தரமாய் தனக்கு முன்பாக வைத்துக் கொண்டார்! என எபி.12:2 கூறுகிறது. ஆங்கிலத்தில் இந்த வசனம், பிதாவின் மீது வைத்திருந்த சந்தோஷத்தை தனக்கு முன்பாக, ஒரு கம்ப்யூட்டர் அல்லது மொபைல் settings போல, நித்தியமாய் 'SET' பண்ணிக் கொண்டார்! என்றே வாசிக்கிறோம் (எபி.12:2). அந்த 'Set பண்ணிய' சந்தோஷத்தின் பொருட்டே 'அவமானம்' சகித்தார்! அந்த கொல்கொதா மேட்டில் நடந்த அகோர துயரம் எத்தனையிருந்தாலும், அவரது சந்தோஷத்தை ஒன்றும் பறித்துக்கொள்ள முடியவில்லை! 'எப்பொழுதும்' சந்தோஷமாயிருந்தார்.... குரு சென்ற அதே வழியில் நாமும் சென்று "கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருக்கவே" ஆண்டவர் அன்புடன் அழைக்கிறார்!!

*-tr*

பெட்டகம் 19 ஏப்ரல் 2017 பரல்கள் 4



# வீழ்ச்சியை மறுத்து, ஜெயம் பெறுங்கள்!

**வீ**ழ்ச்சியின் வலிமை கொடிது! 'கீழ்நோக்கி இழுப்பதே' இந்த உலகம் கண்ட 'புவிஈர்ப்பின்' சூத்திரம்! ஆகிலும், கீழே தள்ளும் விசையை ஜெயித்து வாழ்வதே புதிய உடன்படிக்கையில் இயேசு வழங்கிய வாக்குதத்தமாகும்! (ரோமர்.6:14).

இதையறியாத விசுவாசிகள், இரட்சிக்கப்பட்டும்..... வெகு விரைவில் இந்த "கீழ்நோக்கி அழுத்தும்" விசைக்கு ஆளாகி விடுகிறார்கள்! "பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்!" என்ற புதிய உடன்படிக்கையின் அறைகூவல், அவரது தாசர்கள் ஏற்றுக்கொண்ட ஒப்பற்ற கட்டளை! தங்கள் விசுவாசத்திற்கு ஏற்படும் அபாயம் "கர்ஜிக்கும் சிங்கம்போல்" சூழ்ந்தாலும், எதிர்த்து நின்று..... தங்கள் விசுவாசத்தில் நிலைத்திருக்கும் மாந்தர்களே, அவரது உண்மை சீஷர்கள்! (1பேதுரு.5:8,9). நம்மை கீழ்நோக்கி வீழ்ச்சியடையச் செய்து, நம்மை நசுக்கத் துடித்து வரும் கொடிய பாவமோ அல்லது பகையோ அல்லது மனசோர்வடையச் செய்யும் சூழ்நிலைகளோ..... ஆகிய யாதொரு 'மலையையும்' விசுவாச தைரியமுடன் எதிர்கொண்டு நிற்கும் தாசர்களையே தேவன் தேடுகிறார்! "கீழ்நோக்கி தள்ளும் விசையை" பரிசுத்தாவியின் பெலத்தால், எதிர்த்து போரிட நிற்கும் தாசர்களுக்கு நிகழும் அற்புதமே, ஜெயங்கொண்ட ஜீவியமும்! ஜெயங்கொண்ட ஊழியமும்! உரித்தாகும். அவர்களுக்கே தேவன் துணைநின்று, 'புவி ஈர்ப்பு விசையை' ஜெயங்கொண்டு, அந்த மலை சமுத்திரத்தில் போய் விழும்படி செய்வார்!! அல்லேலூயா.

*-Ed*

**பரலோக பொக்கிஷங்கள்**

வருடசந்தா **ரூ.120.00** ஒரே விலாசத்தில் 3 பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.100.00

வங்கி கணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** Indian Bank - Koodal Nagar Branch
**Savings a/c no: 502087685** Ifsc code: IDIB000K150
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

ஆவிக்குரிய விழிப்பூட்டும் ! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!
சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!

கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள்
207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India
Cell 98430 - 49935 Ph (O) 0452 - 2662306, (H) 0452 - 2661177
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com, cfcindia.com/tamil

## உத்தம சபையில் 'அவரது தூயசாட்சி' ஓங்கி மிளிர வேண்டும்!

*தம்முடைய நாமத்தை தரித்த எல்லா இடங்களிலும் "தூய்மை நிறைந்த சாட்சிகளையே" கர்த்தர் விரும்புகிறார். சாத்தானின் தந்திரம் யாதெனில், ஏற்கனவே சபையில் நற்சாட்சி பெற்றவர்களை கறைப்படுத்த விரும்பும் அவனது தந்திரமேயாகும்! துரதிருஷ்ட வசமாய், இன்றைய சபையின் மூப்பர்கள், தங்கள் கூட்டங்களில் எண்ணிக்கை அதிகமாய் வருவதில் களிகூர்ந்து..... கொஞ்சம் கொஞ்சமாய், தங்கள் சபையின் களங்கமற்ற தூய்மையில் அக்கறை கொள்ளத் தவறிவிட்டார்கள். இதனிமித்தம், "கர்த்தருடைய பரிசுத்த சபையாய்" திகழ்ந்த சபைகள், இன்று 'ஒரு சாதாரண ஸ்தாபனமாய்' பின்னடையும் அபாயத்தில் உள்ளது.*

*'நான் கட்டும் சபையை, எவ்வித மரணத்தின் ஆவியின் வல்லமையும் மேற்கொள்ளாது' என்றே இயேசு சொன்னார் (மத். 16 : 18). இதுபோன்ற வலிமையான ஆவிக்குரிய சபையை கிறிஸ்து மாத்திரமே கட்ட முடியும். அது, நம்மால் முடியாது! சபையை ஆளக்கூடிய கர்த்தத்துவம், அவரது தோளின் மேல் இருக்கிறது என்ற உண்மையை நாம் ஒருபோதும் மறக்கக்கூடாது (ஏசா. 9 : 6). அன்று நேபுகாத்நேச்சார் "நான் கட்டின பாபிலோன் அல்லவா?" எனக் கூறிய வீழ்ச்சி யானது இன்றும் அநேகரை வீழ்த்தியுள்ளது! (தானியேல் 4 : 30). இதற்கு காரணம் "**சபையைத் தாங்கள் கட்டுவதாக எண்ணும்**" இவர்களது எண்ணமேயாகும்!*

*தம்முடைய உன்னதபணிக்கு, முதலாவதாக தேவனுடைய இராஜ்ஜியத்தை தேடுபவர்களையே தேவன் தேடிக்கொண்டிருக்கிறார்! இவர்களே தங்களுடைய வாழ்வில் கர்த்தருடைய சபை கட்டுதலுக்கு முதல் இடம் வகுத்தவர்கள்! கிறிஸ்துவும் அவ்விதமே சபையின்மேல் அன்புகூர்ந்து, தம்மைத்தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார். அவரைப்போலவே, உத்தம ஊழியர்களாய் நாமும் சபையை நேசிக்கும்போது.... நம்மையும் நமக்குள்ள யாவற்றையும் அவரது சீரிய பணிக்கு நம்மை ஒப்புக்கொடுக்கமுடியும்!*

*கிறிஸ்துவின் சபையை கட்டுவதைவிட, சொந்த உத்தியோகத்தை மேலாக கருதுபவர்கள், பாபிலோனைத்தவிர....சபையைக் கட்ட எதிர்பார்க்க முடியாது!*

**தேவன் நம்மிடம் தனது மாறாத உத்திரவாதத்தை அளிப்பதற்கு முன்னால், நம் இருதயத்தில் அவருடைய சரீரமாகிய தூய சபையை கட்டுவதற்கு நாம் முதல் இடம் தருகிறோமா? என்றே நம்மை சோதித்து அறிவார்!!**

*அதுபோலவே, சிறந்த 'ஆவிக்குரிய மூப்பர்கள்' மாத்திரமே, பாவத்தை தங்கள் சபைகளில் தைரியமாய் கடிந்து கொள்வார்கள்! ஆம், ஒருவன் தன் அந்தரங்க வாழ்க்கையில் தேவனிடத்தில் கிட்டிச் சேர்ந்து, தன்னை கழுவிக்கொண்டால் மாத்திரமே, தெய்வீக அதிகாரத்துடன் பாவத்தைக் கடிந்துகொள்ள முடியும். நம்முடைய மாம்சத்திலே நாம் கண்ட அசுசிகளை கழுவாத பட்சத்தில், பாவத்தை கண்டித்துப் பேசுவதும், பிரசங்கிப்பதும் மாய்மாலமாய்தான் இருக்கும்!!*

*இன்றைய 'கரிஸ்மாடிக்' மற்றும் பெந்தெகோஸ்தே குழுவினர்கள் தூதர்களையும், இயேசுவினுடைய வெளிப்புற சரீரத்தையும்,* **கனவு மற்றும் தரிசனங்களின் மூலம் காணும்படி** *அதிக ஆர்வமுடையவர்களாய் இருக்கிறார்கள். இவர்களோ, தாங்கள் சோதிக்கப்படும் நேரங்களில்* **தங்கள் மாம்சத்தில் எழும் கேடான ஆசை இச்சைகளைக் காண்பதற்கு** *சிறிதும் அக்கறை கொள்வதில்லை! அந்த இச்சைகளை வென்ற இயேசுவைக் காணும் ஆவிக்குரிய கண்களும் இவர்களுக்கு இல்லை! மூன்றாம் வானம் ஏறிய நிஜ அனுபவத்தை பவுல் பெற்றிருந்தார். ஆனால், பவுல் அப்போஸ்தலனோ அந்த 'நிஜ' தரிசனத்தில்கூட தன்னை மேன்மை பாராட்டத்துணியவில்லை. அப்படிச் செய்தால், தானும் மனுஷீக தரத்திற்கு இறங்கி ஆவிக்குரிய உயர்ந்த தன்மையை இழந்துவிடும் அபாயத்தை நன்கு அறிந்திருந்தார்! (2கொரி.12:2-5). அவர் கண்ட வெளிப்பாடெல்லாம்,"என் மாம்சத்திலே நன்மையானது ஒன்றுமில்லை என்று அறிந்திருக்கிறேன்... நிர்பந்தமான மனுஷன் நான்!"என்பதுதான்! எனவேதான், "இந்த மரணத்திற்குரிய சரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்?" என்றே பவுல் கதறினார். இந்த வெளிப்பாடே பவுலின் வாழ்க்கையை, அவரது ஊழியத்தை மறுரூபப்படுத்தி மகிமைமேல் மகிமைஅடையச் செய்தது! (ரோமர் 7:18, 24). இவ்விதமான வெளிப்பாட்டையே நாமும் பெறவேண்டி இருக்கிறது. அப்போதுதான் நாமும் கிறிஸ்துவினுடைய சரீரமாகிய சபையிலே பரிசுத்தத்தை காத்துக் கொள்ள முடியும்!*

*"தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார்..." என்ற சத்தியத்தை தேவபக்திக்குரிய இரகசியமாகவே 1தீமோத்தேயு. 3 : 16 கூறுகிறது. இதை உபதேச நீதியாக கற்றுக்கொண்டு பிரசங்கிப்பவர்கள் பாபிலோனைத் தான் கட்ட முடியும்! தமக்கு பயந்தவர்களுக்கு தமது*

ரகசியங்களை 'தனிப்பட்ட விதத்தில்தான்' கிறிஸ்து ஒருவனுக்கு தெரியப்படுத்துவார்.

**தான் சோதிக்கப்படும் ஒவ்வொரு நேரத்திலும், கிறிஸ்துவும் அவ்வாறாகவே சோதிக்கப்பட்டார் என்ற வெளிச்சத்தில்தான் ஒருவன் கிறிஸ்துவை போலவே பாவஞ்செய்யாது வாழ முடியும்!**

இவ்வாறு நடைமுறை வாழ்க்கையில் பெற்று அனுபவிக்கும் பரிசுத்தம், வெறும் உபதேசமல்ல, இயேசு ஜெயித்ததுபோலவே **தாங்களும் ஜெயித்திட முடியும் என்ற விசுவாசமே,** அவர்களின் கைமேல் கிடைத்த பலனாகும்! தேவனுடைய மகிமையைத் தவிர தனக்கானதை தேடாதவர்கள் மாத்திரமே "அவர் நடந்தபடியே தாங்களும் நடந்திட முடியும்" என்ற விசுவாசத்தைப் பெற்றவர்கள் (1யோவான் 2 : 6).

இன்று வெகு சிலரே 'பரிசுத்தமாகுதலை' கிறிஸ்து வைத்துச் சென்ற அடிச்சுவடுகளில் நடந்து கண்டடைகிறார்கள். தங்கள் **மாம்சத்திலுள்ள** அசுசிகளைக் கண்டு ஜெயித்தவர்கள் மாத்திரமே, தங்கள் **ஆத்துமத்தில்** பிரவேசிக்கும் வஞ்சகங்களையும் கண்டிட முடியும்! ஆத்மீக அல்லது மனுஷீக வாழ்க்கை என்பது, மாம்சத்திலுள்ள அசுசிகளைப்போல் விகாரமாய் காணப்படுவதில்லை. இயேசுவோ "தம் ஆத்துமாவை மரணத்திற்கு தப்புவிக்கும்படியும்" பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம் செய்து ஜெபித்தார் என்று வாசிக்கிறோம் (எபிரெயர் 5: 7).

வளர்ந்து வரும் சபையை, வெளித்தோற்றத்தின்படியான பயங்கரமான பாவங்களை வைத்து சாத்தான் வஞ்சிப்பதில்லை. விகாரமாய் காணப்படாத மனுஷீக அல்லது ஆத்மீக வாழ்க்கையின் மூலமே "தந்திரமான நயவஞ்சகத்தில்" வீழ்ச்சியடையச் செய்கிறான்.

**அகந்தை! மனுஷர் புகழ்ச்சியை தேடுதல்! பண ஆசை கொண்டிருத்தல்! மானிட அறிவிற்கும் புத்திசாலித்தனத்திற்கும் முன்னுரிமை தருதல்! தேவன் தராத திட்டங்களைக் கொண்டு வழி தவறுதல்! பார்வைக்கு நன்மை போன்ற, சுய சித்தம் செய்தல்!.... ஆகிய ஆத்துமாவை கறைப்படுத்தும் எண்ணற்ற தந்திரங்களை சத்துரு பயன்படுத்தி, கர்த்தருடைய தூயசாட்சியை தேவனுடைய சபையில் கறைப்படுத்துகிறான்!!**

ஆகிலும், தங்கள் மாம்ச அசுசிகளைக் களைந்து கொண்டவர்கள் **மனத்தாழ்மையோடு தேவனுக்கு முன்பாக** நடப்பதினால், மேற்கண்ட மாம்ஷீக வஞ்சகத்திலும் விழாதிருக்க தேவன் வெளிச்சம் தருகிறார்! ஒருவன், தேவனுக்கு முன்பாக அனுதினமும் நின்று வெளிச்சம் பெறாமல், இவைகளை வேறே எந்த வகையிலும் கண்டறிவது கடினம்.

**தங்களது ஆத்துமத்தின் அசுசிகளை மரணத்திற்கு ஊற்றியவர்கள் மாத்திரமே "சபையில் நிறைவான தீர்க்கதரிசன ஊழியத்தை" பெற்றிருப்பார்கள்!**

*இது இல்லாமல் பிரசங்கிக்கப்படும் பிரசங்கங்கள் "புத்தி சாமர்த்தியத்தினால் பிரசங்கிக்கப்படுவதால்" சபையில் ஆவிக்குரிய மரணமே சம்பவிக்கும்! அல்லது மக்களை உணர்ச்சிவசப்படுத்தி, கவர்ச்சிக்கும் பிரசங்கங்களும் "ஆவிக்குரிய மரணத்தையே" சபைக்கு கொண்டு வந்து சேர்க்கும்!*

*ஆகவே, கறைபடாத சபை வேண்டும்! என வாஞ்சிக்கும் உத்தம ஊழிய சகோதரர்களுக்கு, "ஒரே ஒரு விடையைத்தான்" தேவன் வைத்திருக்கிறார்! தேவனுக்கு முன்பாகச் சென்று, தங்கள் முகத்தை புழுதியிலே மறைத்து, தாங்களும் இரட்சிக்கப்பட்டு.... சபை மக்களையும் இரட்சித்திட நாடும் வழியைத் தவிர, வேறொரு வழியில்லை! "எப்போதும் இயேசுவின் மரணத்தை சுமந்து திரிவதைத் தவிர" வேறுவழி இல்லை! (2 கொரிந்தியர் 4 : 10, 11). மற்ற அனைத்தும், மனுஷருடைய பாராட்டுதலை பெறுவதற்காக நடந்திடும் ஊழியங்களே ஆகும்.*

**சபையிலுள்ள மக்களில் சுயத்திற்கு மரித்திட ஒப்புக்கொடாதவர்கள், அடிக்கடி 'மனத்தாங்கல்' அடைவார்கள்! தேவனுடைய பாரிசத்திலிருந்து வரும் செய்திகளைக் கேட்டு களைத்துப்போன இவர்கள் "தங்களுடைய இருதயத்தில் உண்மையாய் நீதியின் மேல் பசிதாகம் கொண்டிருக்கவில்லை" என்பதையே நிரூபிக்கிறார்கள்!**

*அதுபோன்ற மனத்தாங்கலடைபவர்கள், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையைவிட்டு விலகும்படி தேவனே அனுமதித்துவிடுவார்!*

*நாம் பிரசங்கிக்கும் சிலுவையின் உபதேசம், மனுஷீக அல்லது ஆத்தும மனம் கொண்டவர்களுக்கு பைத்தியமாகவும், இயேசுவைப் போல தொடர்ந்து இரட்சிக்கப்பட்டு பரிசுத்தமாக விரும்புகிற வர்களுக்கு "தேவபெலனாக" இருக்கிறது என 1கொரிந்தியர் 1:18 மிகத் தெளிவாக பிரித்து காட்டுகிறது!*

*இன்றும் இவ்வித பிரிவினையை உத்தமமான சபைகளிலும் தேவன் அனுமதிக்கத்தான் செய்கிறார்! ஆகிலும் நல்ல பொக்கிஷமாய் அருளப்பட்ட "இந்த விலையேறப் பெற்ற சுவிசேஷத்தை" நாம் அனைவரும் கடைப்பிடித்து பாதுகாப் போமாக! கிறிஸ்துவினுடைய சபைகளில் அவருடைய தூய சாட்சி ஓங்கி மிளிர்வதாக!!*

*– சகரியா பூணன்*

## நட்பை பாதுகாக்க 'புறங்கூறுதலை' புசிக்க மறுத்த ஞானி!

**கி**றிஸ்து பிறப்பதற்கு முன்பாக வாழ்ந்த ஒரு புகழ்பெற்ற கிரேக்க ஞானிதான் சாக்ரடீஸ். **ஓர் சுத்த மனசாட்சியை** காத்துக் கொள்வதில், இயேசுவின் போதனைக்கு ஒப்பாகவே வாழ்ந்தவர்! குறிப்பாக, பிறரைப் பற்றிக்கூறும் 'அவதூறுகளை' (Gossip) தன் நெஞ்சத்தில் ஏற்றுக் கொள்ள மறுத்து, தூய்மையான மனசாட்சியில் வாழ்ந்து, சிறந்து விளங்கியவர். சாக்ரடீசுக்கு 'புளூட்டோ' என்ற பெயருடைய நண்பர் இருந்தார். அவரும் ஓர் சிறந்த தத்துவ மேதையாகவே மக்களால் மதிக்கப்பட்டு வந்தார். **புளூட்டோவிடம் கொண்டிருந்த நட்பை, சாக்ரடீஸ் சிறந்த முறையில் பாதுகாத்து** கொண்டிருந்தது மாத்திரமல்ல, அந்த நட்பு அவருக்குள் வளர்ந்தும் வந்தது!

நட்பை பாதுகாத்துக் கொள்வதற்கு, அவர் கடைப்பிடித்த "அவதூறு கேட்க மறுத்த" அவரது பண்பு, நம் யாவருக்கும் நல்லதொரு மாதிரியாய் விளங்குகிறது!

ஒருநாள், சாக்ரடீசுக்கு அறிமுகமான ஒருவர், சாக்ரடீசை சந்தித்து "சாக்ரடீஸ், உன்னுடைய நெருங்கிய நண்பன் புளூட்டோவைக் குறித்து **'சேதி' ஒன்று** கேட்டேன்?" எனக் கூறியபோது .....

"சற்று பொறுங்கள்!" எனக் கூறிய சாக்ரடீஸ், "என் நண்பனைக் குறித்து நீங்கள் யாதொன்று சொல்வதற்கு முன்பாக **மூன்று வடிகட்டி சோதனை** உங்களிடம் வைத்திட விரும்புகிறேன்" எனக் கூறினார்.

அதற்கு அந்த சகோதரன் "என்ன, மூன்று வடிகட்டி சோதனையா?" என வியந்து கேட்டார்!

'ஆம்' என பதிலுரைத்த சாக்ரடீஸ் "என் நண்பனைக் குறித்து நீங்கள் கூறிடும் 'சேதி' இந்த 'மூன்று வடிகட்டி சோதனையில்' கடந்து வருவது **என் சுத்த மனசாட்சிக்கு** நல்லதாகவே நான் கருதுகிறேன்:

ஆகவே, **வடிகட்டியின் முதல் சோதனை 'உண்மை' (Truth)** என்பதே ஆகும். என் நண்பனைப் பற்றி நீங்கள் கூறும் சேதி முற்றிலும் உண்மையானதுதானா? எனக் கேட்டார்.

"ம்.... அப்படிச் சொல்ல இயலாது! ஏனெனில் 'இந்த சேதியை' எனக்கு வேறொருவர்தான் கூறினார்...." எனக்கூற,

உடனே சாக்ரடீஸ், "புரிந்து விட்டது.... நீங்கள் சொல்லப் போகும் சேதி உண்மையா? இல்லையா? என உங்களுக்கே தெரிய வில்லை!" எனக் கூறினார்.

"சரி போகட்டும்.... **வடிகட்டியின் இரண்டாவது சோதனை 'நன்மை'**

**(Goodness)** என்பதே ஆகும். என் நண்பனை பற்றி நீங்கள் கூறும் சேதி நன்மையான சேதியா?" எனக் கேட்டார்.

"ம்..... அப்படிச் சொல்ல இயலாது, கொஞ்சம் நன்மைக்கு புறம்பானதுதான்...." எனக்கூற,

உடனே சாக்ரடீஸ் "புரிந்து விட்டது..... நீங்கள் சொல்லப் போகும் சேதி, என் நண்பனை பற்றிய **தீமையான சேதிதான்!** அதுவும் கூட, அது உண்மையானதுதானா என்பதும் உங்களுக்கு தெரியாது" எனக்கூறி....

தொடர்ந்து சாக்ரடீஸ் "சரிபோகட்டும்..... எனது கடைசி **வடிகட்டியின் மூன்றாவது சோதனை 'பயனுள்ளது' (Usefulness)** என்பதே ஆகும். என் நண்பனைப் பற்றி நீங்கள் கூறப்போகும் சேதி, எனக்கு எவ்விதத்திலும் பயனுள்ளதாய் இருக்குமா?" எனக் கேட்டார்!

அவர் சிரித்துக் கொண்டே "அப்படியும் சொல்ல இயலாது...." என்று கூறவே.....

சாக்ரடீஸ் தனது முடிவுரைக்கு வந்து விட்டார், "அன்பானவரே நீங்கள் சொல்ல வந்த சேதி உண்மையானதாகவும் தெரியவில்லை! நன்மையானதாகவும் தெரியவில்லை! குறைந்தது பயனுள்ளதாய் இருக்கிறதா..... அதுவும் இல்லை! பின் ஏன் எனக்கு என் நண்பனைக் குறித்த 'அவதூறான' சேதியை சொல்ல வேண்டும்?" என முற்றுப் புள்ளி வைத்துவிட்டார்.

இவ்வித உத்தம குணம் கொண்ட சாக்ரடீஸிடம், அவரது நண்பனாகிய புளூட்டோவை பற்றி அநேகர் கூறவந்த அவதூறை, "அந்த அவதூறு என்ன சேதி?" என சாக்ரடீஸ் கடைசி வரை கேட்கவே இல்லை!

அந்த அவதூறு யாதெனில் "புளூட்டோ தன் மனைவியை, வீட்டில் வைத்து அடித்து விட்டார்" என்ற சேதியே ஆகும். சாக்ரடீஸ், தன் நண்பன் புளூட்டோவின் நட்பை, சேதமில்லாமல் பாதுகாத்து கொண்ட இரகசியமாகிய "**மூன்று வடிகட்டி சோதனையை**" நாமும் கைக்கொள்வது, **உத்தம நட்பிற்கு** சிறந்த இலக்கணமன்றோ!

நட்பிற்கு சேதமில்லாமல் இவ்வித உத்தமத்தை காத்துக் கொண்ட சாக்ரடீஸிற்கு நடந்தது என்ன தெரியுமா? இந்த சாக்ரடீஸ், "கிரேக்க தெய்வத்தை தூஷிக்கிறார் என்றும், இளைஞர்களை புரட்சி யாளர்களாய் மாற்றுகிறார் என்றும்" **பொய்யாய் குற்றம் சாட்டப்பட்டு, அந்த பொய் நிரூபிக்கப்படாமலே** மரண தண்டனை பெற்றார்! அந்நாட்களின் வழக்கப்படி, சிறைச்சாலையில், அவரே குடிக்கும்படி "**விஷக்குப்பியை**" கொடுத்து, குடிக்கும்படி செய்தனர்! அந்த தண்டனையைக் காண

*கூடிவந்திருந்த மக்கள் மன்றத்திற்கு முன்பாக.... "இன்று, என்னுடைய குற்றங்கள் எதுவும் என்னை தண்டிக்கவில்லை. மாறாக வதந்தியும், என்னைப் பற்றிய அவதூறுகளும்.... இவைகளை* **ஒருவருக்கொருவர் காதுகளில் கிசுகிசுத்து,** *திரள் கூட்டமாய் கைகோர்த்து குற்றம் சாட்டியிருக்கிறார்கள். குற்றம் இல்லாத நான்.... அவதூறுகளால் குற்றவாளியாகி, விஷம் அருந்தி மரிக்கப்போகிறேன்!" என்றார்.*

*தூற்றித்திரியும் தீய பண்பைக் குறித்து சாக்ரடீஸ் கூறிய வாசகங்களை நாம் யாவரும் மனதில் வைப்பது நல்லது.... அவர் கூறினார் " தூற்றுதல் ஓர் கொடிய தீய செயல்! அதை தூக்கி, தோளில் போட்டுக் கொள்வது* **எளிது** (light weight)*! ஆனால், அதைத் தூக்கி சுமப்பது சொல்லொண்ணா* **பாரம்** *கொண்டது* (heavy)*! பின்பு அதைக் கீழே இறக்கி விட்டு தப்பிப்பதோ.... மிக மிக* **கடினம்** (hard)*!" என்றார்.*

*"தீமையை விட்டு விலகுவதே கர்த்தருக்குப் பயப்படுகிற பயம்" நீதிமொழிகள்.3: 7. ஆமென்.*

*– Selected*

---

## வாழ்வின் சோகங்கள் 'என் பெருமையை' கால் மிதிக்கச் செய்தது!

*அம்மை நோய் என்னையும் என் பிள்ளைகளையும் தாக்கிய கொடூரம், யாதொருவராலும் ஆறுதல் சொல்ல முடியாத வேதனையாயிருந்தது. என்னைக் காண வந்த அனைவரும் 'எனக்கு ஏற்பட்ட சோக நிலைமை' என்றே நியாய முத்திரை பதித்தார்கள். ஆனால் எனக்கோ,* **தேவன் எனக்கு இரகசியமாய் அளித்த, அவரோடு கொண்ட ஐக்கியத்தின்** *சொல்லி முடியா மகிழ்ச்சியாகவே இருந்தது! இந்த சூழ்நிலை, என்னைச் சூழ்ந்திருந்த மனுஷர் புகழ்ச்சியின் மாயைக்கும், என்னை ஆட்கொண்ட பெருமைக்கும் விரிக்கப்பட்ட மறைவான கண்ணியாகவே என் கண்களுக்குப் புலப்பட்டது.*

*இந்த ஈன சுயத்தைப் பிடித்து சிக்க வைப்பதற்கு தேவன் மறைவாய் விரித்த கண்ணிக்காக தேவனை ஸ்தோத்திரித்தேன். என்னையும் ஓர் ஆழ்ந்த மௌனம் ஆட்கொண்டது!*

*இந்த நாள் வரை என்னைச் சூழ்ந்திருந்த ஒருவராகிலும் யாதொரு முறுமுறுப்பையும் குறை சொல்லுதலையும் என் வாய் மூலமாய் கேட்க முடியவில்லை. இந்த துயர சம்பவங்கள்* **'என் மீது விழுந்த குற்றபழி'** *என எண்ணிய ஜனங்கள் மத்தியில், .... எனக்கோ என் அந்தரங்க மாயையிலிருந்து விடுதலையான சுதந்திரமாகவே கண்டேன். என்மீது அதிருப்தியாயிருந்த பாவ சங்கீர்த்தன பீடத்து அம்மையார், என்னை காண வந்து, "உனக்கு அம்மை நோய் வந்தது.... உனக்கு பெருவருத்தம்*

*உண்டாக்கியிருக்க வேண்டும், அப்படித்தானே!" என அந்த நேரத்திலும் வஞ்சனையாய் என்னிடத்தில் கேட்டார்கள்! நானோ, புன்முறுவலோடு அமைதியாயிருந்தேன்.*

*எனக்கு அம்மை நோய் வந்த அதே நாளில் பாதிக்கப்பட்ட என் கடைசி சின்ன மகன், சரியான வைத்தியம் இல்லாமல் அன்று* **மரித்துபோனான்!** *அந்நாளில் என் இருதயத்தில் சொல்லொண்ணா வேதனை அடைந்தேன்! மிகவும் தளர்ந்து பெலவீனமடைந்த அந்த நேரத்தில், தேவனிடம் நான் தவழ்ந்து சென்று அவரது பெலனை கெஞ்சிக் கேட்டு அள்ளிப்பருகினேன். இப்போது, என் பெலவீனத்தி லிருந்து* **ஓர் புதிய தெம்புடன்** *எழுந்து, என்னையே மீண்டும் தேவனுக்கு அர்ப்பணம் செய்தேன்.... தேவனிடத்தில் யோபு கூறியதுபோல் "என் சின்ன மகனை நீரே எனக்குத் தந்தீர்.... இப்போது, அவனை நீரே எடுத்துக்கொண்டீர்! உம்முடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம்!!" என வணங்கி சிரம் தாழ்த்தினேன். "***பலிபீடத்தில் கிடத்தும் வலிமையான ஆவியினால்***" வலிமையாய் ஆட்கொள்ளப்பட்ட நான், என் இளைய மகனை மிகுந்த கனிவோடு நேசித்தாலும், அவனுடைய மரண செய்தியால், துளிகூட கண்ணீர் விடாமல்* **'தேவனால்' தேற்றப்பட்டேன்.** *கல்லறையில், அவனைக் கொண்டு வந்து வைத்தபோது, எங்களோடு வந்து நின்ற டாக்டர் "கல்லறையில் தயவு செய்து கல் வைத்து மூடாதிருங்கள். ஏனெனில் உங்களின் இரண்டாவது மகள் இன்னும் இரண்டு நாளில் இதே கல்லறைக்கு வந்துவிடுவாள்" என சோகமுடன் கூறினார். அதே நேரத்தில் என் மூத்த மகனும், மரணத்திற்கு வெகுதூரமாய் இல்லை.*

இவ்வாறாக, ஒரே சமயத்தில் என் எல்லா மூன்று பிள்ளைகளையும் இழக்கும் சோகத்தில் இருந்தேன்.

*என் கணவரோ, மன உளைச்சலுக்கு ஆளாகி வெகுவாய் சோர்ந்து விட்டார். என்னையும் சோர்வின் ஆயுதம் வலிமையாய் தாக்கியது! ஆனால் அதிசயிக்க விதத்தில், என் இளைய மகள் உயிர்பிழைத்து சுகம் பெற்றாள்.*

*கடைசியாக, என் மாமியார் வீட்டு மருத்துவர் வந்தார். அவர் வந்த நேரம், எல்லாம் முடிந்து விட்ட கடைசி நேரம்போல் தோன்றியது. ஆகிலும் என் கண்களில் பெரிய வீக்கமாயிருந்த சலங்களை அவர் பலமுறை பிதுக்கி வெளியே எடுத்தார். அதுபோலவே என் தோள்பட்டை இரண்டிலும் 'சலம் எடுத்து' சிகிச்சை அளித்தார். தாமதமான இந்த சிகிச்சையால் நான் மரண தருவாய்க்கு சென்று விட்டேன்! அந்நேரத்தில், மரணத்தை ஒரு ஆசீர்வாதமான வாசலாகவே கண்டேன். ஆகிலும், மரணவாசல் எனக்கு தூரமாய்*

விலகி "வாழ்வின் சோதனைகளை சந்திக்க என்னை மீண்டும் பலப்படுத்த" தேவன் என்னை ஆயத்தம் செய்ததையே கண்டேன்.

தேவனுடைய கிருபையால் பூரண சுகமடைந்த என் மூத்த மகனும் மகிழ்ச்சியுடன் என் அறைக்குள் பிரவேசித்தான். அழகுள்ள அவனுடைய முகத்தில் மேடுபள்ளங்கள் போல் தழும்புகள் இருந்தன. அன்றுதான், என்னுடைய முகமும் அதுபோல் இருந்ததை என் கண்ணாடியில் கண்டேன்!

சற்று அதிர்ச்சியாய் இருந்தாலும், தேவன் தன்னுடைய பலியை முழு அளவில் என்னில் நிறைவேற்றினார் என்ற உண்மையை அறிந்து கொண்டேன்! "ஓ தேவனே, நீர் எனக்கு தந்த அளவில்லாத ஆசீர்வாதங்களும் இரட்சிப்பும் இந்த சிலுவைகள் மூலமாகவே வந்தது என அறிந்து உம்மைத் துதிக்கிறேன்!

..... அன்பினிமித்தம், முதல் பலியாய் உம்மையே ஈந்த கர்த்தாவே 'உம்முடைய இரட்சிப்பின் பாத்திரத்தை ஏந்தி' உம்மைத் தொழுது கொள்வது தவிர! வேறொரு மேன்மையை நான் அறியேன்! உம்மோடு பாடுகளுக்குள் பிரவேசிக்கும் பாக்கியமும், அதை சிறிதும் எதிர்த்து தள்ளிவிடாமல் 'என்னை ஒப்புக்கொடுக்கும்' சிலாக்கியமும் உம்முடைய கிருபை என்றே காண்கிறேன். இந்த கிருபை, இப்போது என்னில் தொடர்ந்து பெருகி நிற்பதையும் அறிந்து மகிழ்கிறேன்!" என என் மனதில் தெய்வ அன்பினால் நிறைந்து அவருக்கு முன்பாக கசிந்து நின்றேன்!

என் மகனின் முக தழும்பிற்கு வாசனை களிம்பும், தைலமும் என் மாமியார் போட்டார்கள். அதில், அவனுடைய முகத்தில் இருந்த பள்ளங்கள் மறைந்து நல்ல சுகம் தந்தது. இப்போது, அந்த களிம்பையும் தைலத்தையும் என்னிடம் கொடுத்து போடச் சொன்னார்கள். ஆனால் தேவன் என்னிடத்தில் நடப்பித்த **அவரது வைராக்கியமான கிரியைகளை மதித்து,** நான் அவைகளைப் போட மறுத்து விட்டேன். என் இருதயத்தில் எழுந்த ஓர் சப்தம் "நீ என் பார்வைக்கு அழகாய் இருந்தால், நீ இருக்கும் வண்ணமாகவே இருப்பதை நான் விரும்புகிறேன்" என்ற மென்மையான குரல், என்னைத் தேற்றியது. தழும்புகளும் பள்ளங்களும் கொண்ட என் முகத்தோடு, நான் நடந்து சென்றேன். வெளியில் உள்ள காற்றுபட்டதினிமித்தம் என் முகத்தழும்பு சிவந்துபோய் வேதனை தந்தாலும், "என் பெருமையில் உயர்ந்த நிலைமாறி, என் சிறுமை வெற்றி சிறந்தது!" என உள்ளம் மகிழ்ந்து, அந்த வீதியில், **என் பெருமையை காலில் மிதித்து** ஜெயம் கொண்டவளாய் நடந்தேன்!

– மேடம் குயான்

## சபையின் தரம் குறைந்தால், ஊழியமும் கூடாது!

**தே**வசனம் 'விதைக்கு' ஒப்பிடப்பட்டிருப்பதை நாம் அறிவோம். ஆகவே அந்த விதையை விதைப்பவர்களுடைய ஆவிக்குரிய நிலைமை எந்த நிலையில் இருந்தாலும், அந்த விதையோ 'ஒரே பலனைத்தான்' தர வேண்டும். ஆனால்..... ஆவிக்குரிய ரீதியில் இவ்வாறு சம்பவிப்பதில்லை!

"ஒரே செய்தியே" ஜனங்களுக்குப் பிரசங்கிக்கப்பட்டாலும், அதைப் பிரசங்கித்த மனிதர்களின் தேவபக்தி "வெவ்வேறு வித்தியாசமான" வாழ்க்கையாய் இருக்கும் பட்சத்தில், அவரவருடைய வாழ்க்கையின் அடிப்படையைக் கொண்டுதான் மனந்திரும்புகிறவர்களுடைய ஜீவிய தரமும் வெவ்வேறாய் அமைந்து விடுகிறது! ஆம், பிரசங்கித்தவர்களின் வாழ்க்கைத் தரத்தின் அடிப்படையிலேயே பலனும் கிட்டுகிறது!!

லோகசிந்தையில் சிக்குண்டு, ஆவிக்குரிய தன்மையை இழந்த ஒரு சபை, கடல் கடந்து சென்று வேறு பாஷைக்காரரிடத்திலும், வேறு கலாச்சாரம் கொண்ட ஜனங்களிடத்திலும் இவர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தாலும், பிரசங்கித்தவர்களின் 'கீழ்த்தரமான' ஜீவியதரத்தின் படிதான் இவர்கள் ஒன்றை உருவாக்கிட முடியும்!!

பார்த்தீர்களா, வெறும் வார்த்தை மாத்திரமல்ல.... **பிரசங்கித்தவர்களின் குணாதிசயம்** மாத்திரமே பலனை தீர்மானம் செய்கிறது.

ஒரு சபை, தன்னிலிருக்கும் செடியின் ஜீவியத்தை ஒட்ட வைத்திட மாத்திரமல்லாமல், வேறு எதுவும் செய்திட முடியாது! தன் தேசத்தில் இவர்கள் கொண்ட சபையின் தரத்தை மாத்திரமே, வேறு தேசத்திலும் இவர்கள் நட்ட வைத்திட முடியும்! 'ஜீவன்' உள்ள யாதொன்றின் மீதும் தேவன் பதித்து வைத்துள்ள மாறாத சூத்திரம் யாதெனில் : "தன் தன் இனம் தன் தன் இனத்தை மாத்திரமே உற்பத்தி செய்திட வேண்டும்!" என்பது தான்.

உலகமெங்கும் சென்று சுவிசேஷத்தை பிரசங்கிக்க வேண்டியது தான் சபையின் தலையாய கடமை என இன்று கூறப்படுவது முற்றிலும் தவறானதாகும்! ஆம், சபையின் முதலாவது தலையாய கடமை சுவிசேஷத்தைப் பிறருக்கு பிரசங்கிப்பதற்கு முன்பாக ஒருவன் ஆவிக்குரிய தகுதியுடைய வாழ்க்கையைப் பெற்றிருக்க வேண்டும் என்பதுதான்! நம் ஆண்டவர் "**நீங்கள் போங்கள்....** " எனக் கூறியது உண்மைதான். ஆனால் அதே சமயத்தில் அவர் "**நீங்கள் காத்திருங்கள்....**" என்றும் கூறினார். வேதம் நமக்கு தெளிவாய் காட்டுகிறபடி, நாம் போவதற்கு முன்பாக முதலாவது காத்திருக்க வேண்டும்!

**இயேசுவின் சீஷர்கள் பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்பாகவே மிஷனெரிகளாய் புறப்பட்டுச் சென்றிருந்தால் "ஆவிக்குரிய பேரழிவு தான்" ஏற்பட்டிருக்கும்!**

*ஏனெனில் இவர்கள் தங்களைப் போன்ற வாழ்க்கையைத்தான் தாங்கள் பிரசங்கித்தவர்களுக்குத் தந்திருக்க முடியும்..... அதன் விளைவாய், அன்று தொடங்கி இன்று வரை கிறிஸ்தவத்தின் முழு சரித்திரமும் சீரழிந்த வாழ்க்கையாய்தான் அமைந்திருக்கும்! பெலனற்ற,* **தரம் குறைந்த கிறிஸ்தவத்தை புறஜாதி தேசத்திற்கு சென்று பிரசங்கிப்பது** *ஒன்றும் கிறிஸ்துவின் கட்டளையை நிறைவேற்றியதாக ஒருபோதும் அர்த்தமாகாது!! நம் ஆண்டவர் இயேசு கடிந்து உரைத்த "ஒருவனை உங்கள் மார்க்கத்தானாக்கும்படி சமுத்திரத்தையும், பூமியையும் சுற்றித் திரிகிறீர்கள். அவன் உங்கள் மார்க்கத்தானாய் வந்த பிறகு, அவனை உங்களிலும் இரட்டிப்பாய் நரகத்தின் மகனாக்குகிறீர்கள்" என்ற மத். 23:15-ம் வசனம் என் ஆத்துமாவை வெகுவாய் பாதித்த வசனமாகும்!!*

*ஆனால் இன்றைய சுவிசேஷ கிறிஸ்தவமோ, புதிய உடன் படிக்கையின் ஜீவியதரத்திலிருந்து வெகு தொலைவில் நிற்பது சொல்லொண்ணா துயரத்தையே நமக்குத் தருகிறது!*

**இன்று சபை தேய்ந்து, தன் ஜீவியத்தோடு உலகத்தையும் ஏற்றுக் கொள்வது, சாதாரண சகஜமாகிவிட்டது!**

*ஆவிக்குரிய தன்மையிலிருந்து சபை விலகி 'சமூக சேவை' என்னும் மார்க்க போர்வையில் பின்னடைந்துவிட்டது. இன்று சபையில் பரிசுத்தவான்கள் ஒன்றும் உற்பத்தியாகி வரவில்லை! இன்று சபையில் உயர்ந்திருக்கும் மாதிரிகள் "செழித்த வியாபாரிகள்" "திறமையான கிரிக்கெட் வீரர்கள்" "சினிமா பாணிகொண்ட சௌந்தரியவான்கள்" ..... அவ்வளவுதான்!! இந்த இலட்சணத்தில் இவர்கள் மார்க்க சம்பந்த நடவடிக்கைகளையும் மேற்கொள் கிறார்கள்.... அதையும், இன்றைய உலக சினேக உத்திகளோடு செயலாற்றுகிறார்கள். இன்று சபையிலுள்ள அநேக வீடுகள் மறைமுக 'சினிமா கொட்டகைகளாகவே' மாறி விட்டன! இன்று சபை களிலிருந்து வெளியிடப்படும் பத்திரிக்கைகள், புத்தகங்கள் ஆழமற்றதாய், பரிசுத்தத்தின் அக்கினியை தங்கள் புத்தகங்களின் விளிம்பின் ஓரத்திற்கு (Border) மாத்திரமே தள்ளி வைத்துக் கொண்டார்கள். இத்தனை கேடாய் நடந்து கொண்டிருந்தாலும், சபையிலிருக்கும் ஜனங்களோ அல்லது, சபையின் மூப்பர்களோ அதைக் கண்டும் காணாதது போலவே அலட்சியப்போக்கில் வாழ்கிறார்கள்!*

*இன்று கிறிஸ்தவத்திற்கு அவசரகாலம் வந்துவிட்டது! ஆம், வெகு சீக்கிரமாய்..... குறைந்த பட்சம் இன்னும் ஐம்பது வருடங்களுக்*

குள்ளாகவே **கிறிஸ்தவம் மறுமலர்ச்சி கொண்டு, ஆர்த்தெழவேண்டும்!** அவ்வாறு சம்பவிக்கவில்லையென்றால், "மெய் கிறிஸ்தவமே" நம் தேசத்தில் இல்லாமல் போய்விடும்! அரைகுறை, நாற்றமெடுத்த ஜீவியம் கொண்ட கிறிஸ்தவர்களின் சதவீதம் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே போவதில் ஒரு பிரயோஜனமுமில்லை! நமக்குத் தேவையாய் இருப்பதெல்லாம், கிறிஸ்துவின் சீரிய வாழ்விற்கு மறுரூபமடைந்த ஒப்பற்ற கிறிஸ்தவமேயாகும்!!

– *A.W.* டோசர்

---

## கெம்பீர சுவிசேஷ தொனி, அச்சம் கொண்ட ஊழியர்களால் மங்கிவிட்டது!

இன்றைய சுவிசேஷ ஊழியத்தின் அறைகூவலைப் பாருங்கள். ஜனங்களை எப்படியாவது கூட்டிவிட வேண்டும் என்ற ஆத்திரத்தில் "உங்களுக்கு என்ன உதவி வேண்டும்? உங்கள் வாழ்க்கையில் அதிகமான வல்லமை வேண்டுமா? தேவ தரிசனம் காண கூடி வாருங்கள்! நீங்கள் விசுவாசித்தால் போதும்...." என **மனந்திரும்புதல் ஏதுமில்லாமல் மலிவான விசுவாசத்திற்கு** அழைத்திடும் சுவிசேஷ மேடைகளை நாம் என்னவென்று சொல்வது? கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்திற்கு கனவீனத்தைக் கொடுத்து, அவரது தியாக பலிபீடம் வேசித்தன அருவருப்பாய் கறைபட்டுகிடக்கிறது! கிறிஸ்துவின் பிரசங்கபீடம் 'கோதுமை மணிபோல், நிலத்தில் வீழ்ந்து' மரித்தவர்களுக்கே சொந்தம்! இந்த விலைக்கிரயத்தை செலுத்த ஆயத்தமில்லாத கிறிஸ்தவ ஊழியன், பிரசங்க பீடத்திற்கு தூர நிற்பானாக!

> இவ்வாறு 'பொறுப்பற்ற ஊழியங்களினால்' சபைகளில் அக்கினி காணப் படவில்லை. கண்ணீரோடு தேவனைத் தேடி பிரசங்க மேடைக்கு முன் வரும் ஆத்துமாக்களுக்கு கரிசனையுடன் அமர்ந்து ஊழியம் செய்பவர்களை இன்று காணோம்!

அந்த ஊழியன் தங்கள் நண்பர்களோடு குலாவி மகிழ்வதிலும் ஐஸ்வரியவான்களுடைய புகழ்ச்சியின் போதையில் மூழ்குவதிலும் திருப்திக்கொண்டு 'அங்கு பிரசங்க பீடத்தை நாடி வந்த, ஆவிக்குரிய தேவை கொண்ட ஆத்துமாக்களை' நிர்விசாரப்படுத்துகிறார்கள்!

இன்றைய சுவிசேஷ சபைகளில் "ஜனங்கள் இரட்சிக்கப் படுவதற்கு அநேக நாமங்கள் இருப்பதுபோலவும்.... அதில் ஒன்றுதான் இயேசுவின் நாமம்!" என தயங்கி தயங்கி பிரசங்கிக்கிறார்கள். "வானத்தின் கீழே மனுஷனை இரட்சிப்பதற்கு **இயேசுவின் நாமமே அல்லாமல்** வேறொரு நாமம் இல்லை!" என அறைகூவும் அதிகாரத்தை சபையில் இழந்து விட்டார்கள்! அப்படிச் செய்தால், தங்களை

'மதப்பிரச்சாரம் செய்பவன்' என யாரும் கூறிவிடுவார்களோ? அதினிமித்தம் துன்பம் ஏற்படுமோ? என்றெல்லாம் பயத்தால் ஆட்கொள்ளப் பட்டிருக்கிறார்கள்.

எலியாவோ, இதற்கு நேர்மாறாக பாகாலின் தீர்க்கதரிசிகளை சவாலிட்டு அழைத்தான். இன்று ஊழியகளத்தில் உள்ளவர்கள் முழுமனதாய் தேவசித்தம் செய்திட தயங்கி நிற்பதைவிட, அன்று கிதியோனைப்போல் இருட்டில் ஒளிந்து அந்நிய தேவர்களின் தோப்புகளை வெட்டிசாய்ப்பது மேல்! இன்றோ கிறிஸ்து அற்ற கொள்கையாளர்களும், தெய்வீக வல்லமையை கனவீனம் செய்யும் மார்க்கவாதிகளும் கைகோர்த்து நின்று, தேவனாகிய கர்த்தரை அவரது ஆலயத்தில் சோதிக்கிறார்கள்!

சபையின் கேடுபாடுகள் நன்றாய் தெரிந்திருந்தும், எச்சரிக்கையின் எக்காளம் ஏன் ஊதப்படவில்லை? நாங்கள் புராட்டஸ்டண்டுகள் எனக்கூறி கொண்டு.... 'கத்தோலிக்க அல்லாதவர்கள் நாங்கள்!' எனகூறும் வெற்று கூட்டங்களே இன்று உள்ளனர். இவர்கள் யாரை அல்லது எதை எதிர்த்து (Protest) நின்றார்கள்? அந்த கிதியோனை போல் பாதியளவு தைரியம் கொண்ட அனல் பெற்றிருந்தாலும், நம்மை சூழநிற்கும் கிறிஸ்தவர்கள் இரத்தத்தினாலும், ஜலத்தினாலும், அக்கினியினாலும் அபிஷேகிக்கப்பட்டிருப்பார்கள்! இந்த 'கிதியோனின் தரத்திற்கு கூட' இல்லாத கிறிஸ்தவம் துயரமல்லவா? இன்று தேவன் 'கிதியோனையா' தேடுகிறார்? 'முற்றிலும் ஜெயம் பெறும்' கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றும் சீஷர்களை அல்லவா? எங்கே அந்த அனல்கொண்ட சீஷர்கள்?

– லியோனார்டு ரேவன்ஹில்

---

## 'கிறிஸ்து அற்ற' அல்ல, கிறிஸ்துவே கிறிஸ்து மார்க்கம்!

**ந**மது ஆராதனைகளிலும், ஊழியங்களிலும் ஆண்டவருக்குப் பூரணமான இடம் கொடுக்கப்படாததால் ஏற்பட்ட ஏராளமான குளறுபடிகளை கண்டுகொள்ளாத தரம் இழந்த கிறிஸ்தவர்களே இன்று பெரும்பாலும் உள்ளனர்! உத்தமமான கிறிஸ்தவர்கள் கூட 'நமக்கு ஏன் இந்த வம்பு' என அவர்களும்கூட கண்டும் காணாதவர்கள்போல் இருப்பது வேதனைதான்! நாமோ, கிறிஸ்துவைச் சொந்தமாக்கிப் பிழைக்கும் உயிருள்ள கிறிஸ்தவர்களாய் இருக்க வேண்டும்! அவர் நமக்குள்ளே இருந்தால், வெளியே நின்று அவர் தட்ட வேண்டிய தில்லை! சர்வலோகங்களையும் தன் சொல்லால் உண்டாக்கிய சர்வ வல்லமையுள்ள ஆண்டவருக்கு 'நமது சம்மதமின்றி' நம்மை இரட்சிக்கமுடியாது! மனமில்லாதவர்களை

அவர் கட்டாயமாய் இரட்சிக்கிறதாயிருந்தால், உலகத்தார் யாவரையும் ஒரே நிமிஷத்தில் மகிமையில் சேர்த்திருப்பார்! அப்படி அவர் செய்யக்கூடுமென்றால், "உன்னைச் சேர்த்துக்கொள்ள எத்தனை தரமோ நான் மனதாயிருந்தேன், உனக்கோ மனதில்லாமற் போயிற்று என்றும்; உங்களுக்கு மனதில்லையே.....!" என்றும் இயேசு யோவான் சுவிசேஷத்தில் கண்ணீர்விட்டுப் புலம்ப வேண்டியதென்ன? நம்மை தமக்குச் சொந்தமாக்கிக்கொள்ளவே வாஞ்சையோடிருக்கிறார்!

பல சூழ்நிலைகளைப் பயன்படுத்தி, நம்மை அவருக்கு சொந்தமாக்கிக் கொள்ள முயற்சிக்கிறார்! இவ்வாறு கிறிஸ்து நமக்குள் வாழ்ந்து, அவர் நமக்குள் வசிக்க இடம் பெற்றால், நாமும் ஆசீர்வதிக்கப்பட்டு, அநேகருக்கு ஆசீர்வாதமாய் இருந்திருப்போமல்லவா?

தேவ ஊழியர்களே, "கிறிஸ்துவே இரட்சிக்கிறவர்" என்பது உண்மையாயினும், அந்த இரட்சிப்பின் சுவிசேஷத்தை நமது கைகளில் தந்திருக்கிறாரே? "எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் புத்தி சொல்லி, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத் தோடும் உபதேசம் பண்ணுகிறோம். அதற்காக நான் எனக்குள்ளே வல்லமையாய் கிரியை நடப்பிக்கிற **அவருடைய பலத்தின்படி** போராடிப் பிரயாசப்படுகிறேன்" என்று அப்போஸ்தலன் மேற்கொண்ட தீர்மானம், ஊழியர்களாகிய நம்மையும் ஆண்டுகொள்ள வேண்டுமல்லவா?

'உலகமே பாழாய் அழிந்துபோகிற இக்காலத்தில்' கிறிஸ்துவின் அடியார்களாகிய நாம் அசதியாயிருப்பது சரியல்ல. பலத்த சோதனையான காலம் இப்பொழுது சபைகளுக்கு வந்திருக்கிற தென்பதை மறக்க வேண்டாம்!

வேத வசனத்திற்கும், கிறிஸ்துவின் ஆவிக்கும் விரோதமான 'அந்தி கிறிஸ்துவின் ஆவி' சபையின் உள்ளே பிரவேசிக்கத் துடித்து நிற்கும் கொடிய காலம்!

சபையிலுள்ள ஒவ்வொரு ஆணும் பெண்ணும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, இரட்சிப்பின் ஆசீர்வாதத்தில் களிகூர்ந்து, ஆவியில் நிறைந்து வாழ, அரும்பாடுபட்டு ஊழியம் செய்வோமாக! பிழைப்புக்கோ, கடமைக்கோ, மனுஷர் புகழ்ச்சிக்கோ, பேர் பிரஸ்தாபத்திற்கோ சம்பாத்தியத்திற்கோ போன்ற **சுய நல நோக்கங் களைத் தூக்கி தூர எறிந்துவிட்டு,** கிறிஸ்துவின் அன்பினால் நிறைந்து, ஆத்மவாஞ்சையுடன் கிறிஸ்துவைப் பிரசங்கிப்போமானால், கட்டாயம் நம் ஸ்தல சபைகளில் பலன் கிடைக்கும்! நீங்கள் கூடும் ஆராதனைதோறும் பிரசன்னமாயிருக்கிற ஆண்டவர், அந்த உத்தம ஊழியத்தை ஆசீர்வதித்து, அநேகரைத் தமக்குச் சொந்தமாக்கிக் கொள்வார்!

நாம் மகிமையில் பிரவேசிக்கும்போது, கிறிஸ்துவின் அளவற்ற அன்பின் பெருக்கத்தையும், கிருபையின் ஐசுவரியத்தையும் கண்டு.... அடடே, **இந்த பூமியில் அவரது சபையின் ஊழியனாய் இருந்தபோது, ஆண்டவருக்காக இன்னும் அதிகமாய் உழைத்தோமில்லையே!** என்று உணர நேரிடும். ஆகையால், ஆண்டவர் கொடுத்த ஊழியத்தை நாம் சுகத்தோடும் பலத்தோடும் இருக்கும்போதே, உண்மையோடும் ஊக்கத்தோடும் நிறைவேற்றுவோமாக! "எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன்" என்று சொன்ன பவுலின் வாஞ்சை நம்மையும் ஆண்டுகொள்ளட்டும்! கர்த்தர் நம்மை அழைக்கும் வேளை வரும்போது: "ஆண்டவரே, பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன். **நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த வேலையை** உமது கிருபையால் செய்து முடித்தேன்! நான் அறியாத ஏது பிழை இருந்தால், என் பிழை பொறுத்தருளும் ஸ்வாமி" என பணிவுடன் கூறி அவரிடம் சேரும் பாக்கியம் பெறுவோமாக! 'கிறிஸ்து அற்ற' அல்ல.... **கிறிஸ்துவே கிறிஸ்து மார்க்கமாய்** நம் சபையில் வாழட்டும்! கிறிஸ்து வரும் வரை ஓங்கி வளரட்டும்!! ஆமென்.

– பரமானந்தம் ஐயர்

---

## தேவன் காட்டும் கடின பயணத்தில் 'உதவிக்கரம்' உண்டு!

**ஜா**ன்பனியன் எழுதிய மோட்சபயணம் சுமார் 200 மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டது. குருபட்டம் பெறாமலே அவர் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தபடியால், இங்கிலாந்து தேசத்தில் சுமார் 12 ஆண்டுகள் சிறைச்சாலையில் இருந்தார். பவுல் சிறைச்சாலையில் இருந்தபோது நிருபங்களை எழுதியதைப்போலவே, ஜான்பனியனும் சிறைச்சாலையில் மோட்சபயணம் புத்தகத்தை எழுதினார். தேவன் ஜான்பனியனை கனம் செய்து, அந்தப் புத்தகம் பல இலட்சக்கணக்கில் பிரிண்ட் செய்து மக்கள் படிக்க அனுமதித்தார். வேதாகமத்திற்குப் பிறகு, தொடர்ந்து அதிக விற்பனையாகும் புத்தகம் இந்த மோட்சபயண புத்தகமாகும்! இதில் உள்ள விசேஷம் என்னவென்றால், ஜான்பனியன் இந்த புத்தக விற்பனையிலிருந்து தனக்கென எந்த ஆதாயத்தையும் பெறவில்லை!

**கிறிஸ்தியான்** என்பவன் இந்த புத்தகத்தின் முக்கிய நபராய் வருகிறார். இந்த கிறிஸ்தியான் வேதாகமத்தை ஒரு நாளில் படித்தார். பாவத்தைக் குறித்தும், நித்திய நியாயத்தீர்பைக் குறித்தும் படித்த கிறிஸ்தியான் தன் மனச்சாட்சியில் அதிகமாய் குத்துண்டு, தன்மீது பெரிய பாவ சுமை இருப்பதை உணர்ந்தான். தன் வீட்டாரிடம் அவர்

ஓடிச்சென்று, பாவம் கொடிது என்றும், அதற்கு நித்திய நியாயத் தீர்ப்பை இறைவன் வைத்திருக்கிறார் என்றும், இந்த பாவ சுமை யிலிருந்து நீங்களும் விடுதலை பெற, என்னோடு வாருங்கள் என்றும் அழைத்தபோது, **கிறிஸ்தியானின் மனைவி, பிள்ளைகள் மறுத்து விட்டனர்.** 'உணர்வுள்ள மனசாட்சி கொண்டவர்கள் மாத்திரமே' பாவத்தின் சுமையை உணரமுடியும் என்பதை கிறிஸ்தியான் விளங்கிக் கொண்டான்.

மிகுந்த பாரத்துடன் வெளியே வந்த கிறிஸ்தியான், சுவிசேஷ பிரசங்கி ஒருவரைக் கண்டான். "ஐயோ, இந்த பாவ சுமையிலிருந்து நான் எவ்வாறு விடுதலை பெறுவது?" என கேட்டான். அதற்கு அந்த பிரசங்கி "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி! அவர் ஒருவரே உனக்கு விடுதலை தரமுடியும். அதோ அங்கு காணும் **சிறிய வாசலுக்குச் செல்,** அங்கு விடுதலையின் வழியை அறிவாய்" என கூறவே, கிறிஸ்தியான் தன்னுடைய விடுதலைக்காக அந்த வாசலை நோக்கி ஓடத்தொடங்கினான். கிறிஸ்தியான் ஓடுவதைக் கண்ட அவன் மனைவியும், பிள்ளைகளும், உறவினர்களும் "இந்த பிரசங்கிகள் பேச்சை நம்பாதே, நீ அங்கே செல்ல வேண்டாம்" என உரத்த சத்தமாய் கூறினார்கள். இதுபோன்ற தடைகளுக்கு அநேகர் தயங்கி தங்கள் பாவ சுமையோடு தேங்கிவிட்டார்கள். 'பாவத்திலிருந்து விடுதலை பெறவேண்டும்' என தீர்மானத்துடன் வாஞ்சிக்கும் மக்களே **'விடுதலையை மறுக்கும்' ஜனங்களின் குரலுக்கு** தங்கள் காதுகளை அடைத்துக்கொண்டும் தீவிரமாய் ஓடுவார்கள். இந்த தடையை தாண்டி வந்த கிறிஸ்தியானை **1. பிடிவாதக்காரன் 2. உலக சமரசன்** ஆகிய நண்பர்கள் குறுக்கிட்டு ஓட்டத்தை தடைசெய்தார்கள். **இந்த பயணம் வீணானது** என பிடிவாதக்காரன் பலமுறை கூறினான். சலிப்புற்ற பிடிவாதக்காரன், கிறிஸ்தியானை விட்டு விலகிச் சென்றான். உலக சமரசன் "நீ சொல்லும் இடத்திற்கு வேகமாய் செல்லலாம்" எனகூற, கிறிஸ்தியானோ "என் சுமையின் பாரம் அதிகம். வேகமாய் செல்ல முடியாது" என கூறினான். திடீரென்று இருவரும் 'உளையான சேற்றில்' விழுந்தார்கள். விழுந்த அதே வேகத்தில், உலகசமரசன் தன் பயணத்திலிருந்து வெளியேறி "**நீ வந்துவிடு இந்த பயணம் கடினம்**" எனக்கூறினான். கிறிஸ்தியான் அதற்கு மறுக்கவே, அவனும் ஓடிவிட்டான். அந்த சமயத்தில் **'சகாயன்'** என அழைக்கப்பட்ட ஒருவர் கிறிஸ்தியானுக்கு உதவிசெய்து உளையான சேற்றிலிருந்து தூக்கிவிட்டார். இந்த உலக வாழ்விலிருந்து தேவன் காட்டும் பயணத்திற்கு செல்பவர்கள் துன்பம் அடைந்தாலும், தொடர்ந்து **தேவனுடைய உதவி கரத்தை** எப்போதும் காண்பார்கள்!!

– மோட்ச பயணம் (சகரியா பூணன் விளக்க உரை)



# ஜான் ஹஸ்,

## சுவிசேஷத்திற்காக 'செக்கோ நாட்டில்' இரத்த முத்திரை பதித்தவர்!

(1369 – 1415)

இருட்டடைந்த சிறைக்கதவு கிரீச்சிட்டு திறந்தது! சிறைக்காவலன் "ஜான் ஹஸ்! வெளியே வாரும்!" என உத்தரவிட்டான். இவ்வாறு செக்கோவின் நான்கு பிஷப் மார்களைப் பார்க்க அழைக்கப்படுவது ஜான் ஹஸ்சுக்கு ஒரு வழக்கமான செயலேயாகும். ஜான் ஹஸ் தொடர்ந்து விசுவாசத்தில் நிலை நின்று மரிக்கப் போகிறாரா? அல்லது விசுவாசத்தை மறுதலித்து உயிர் தப்புவாரா? என்ற விசாரணையே அன்றும் தொடர்ந்தது! புதுமை என்னவென்றால், ஜானின் விசுவாச நண்பன் இந்த பிஷப்புகளோடு கைகோர்த்து நின்ற கொடுமைதான்! அவன் பெயர் ஜான்–தி–கிளம்!

ஜான் ஹஸ் நீண்ட பெருமூச்சு விட்டு, வீழ்ந்து விட்ட தன் நண்பனை நோக்கி "சிநேகிதனே, நான் உங்களுக்கு ஒன்றைச் சொல்ல வேண்டும். நீங்கள் மனதார சத்தியம் இன்னதென அறிந்தவைகளை மறுதலிப்பதைவிட, அந்த சத்தியத்திற்காக நீங்கள் உயிரையும் விடுவதே உத்தமம்!" என கெம்பீரமாய் முழங்கினார். அவர் கூறியதைக் கேட்ட பிஷப் மார்கள் தங்கள் முகத்தை கசப்புடன் சுருக்கி "இவனுக்கு எத்தனை நெஞ்சழுத்தம்! இவனை சிறைச்சாலை ஆழியில் தூக்கி எறியுங்கள்! நாளை இவனுக்கு மரண தண்டனை!" என கொதித்தார்கள்.

அன்றிருந்த சிகப்பு கம்யூனிஸ செக்கோஸ்லவேக்கியா நாட்டில் ஒரு பாதிரியாராக இருந்தவர்தான் இந்த ஜான் ஹஸ்! "கிறிஸ்தவ விசுவாசத்திற்கு சுதந்திரம் வேண்டும்! ஒருவன் தனிப்பட்ட விதத்தில் தேவனோடு உறவு கொண்டாடி வாழ முழு உரிமை வேண்டும்!" என குரல் எழுப்பிய முதல் கிறிஸ்தவர்.

அந்நாட்களில் ஒத்தவேஷம் தரித்து வாழ்ந்த, அதிகாரம் படைத்த, உயர்ந்த ரோம சபைகளின் தலைவர்களை மிகுந்த தைரியமாய் ஜான் ஹஸ் எதிர்த்து நின்றார்! கம்யூனிஸ கொள்கையோடு திரித்து பிரசங்கிக்கப்பட்ட சபையின் போதனைகளை ஏற்றுக்கொள்ள மறுப்பவர்களுக்கு "மரண தண்டனை" வழங்கப்பட்டதையும் மிகுந்த தைரியத்துடன் எதிர்த்து நின்றார்!

19 மாத கால காரிருள் சிறைவாசத்திற்குப் பிறகு, அவர்கள் ஜான் ஹஸ்ஸிடம் வந்து, "இதுவரை நீர் பிரசங்கித்த சத்தியங்களை 'நான் மீண்டும் வாபஸ் பெற்றுக் கொள்கிறேன்' என இங்கே கூடியிருக்கும் பொது ஜனங்களுக்கு முன்பாக நீர் கூற முடியுமா? இவ்வாறு நீர் செய்துவிட்டால், நீர் இழந்த கனத்தை மீண்டும் உமக்கு நாங்கள் தந்து கௌரவிப்போம்!!" என கூறினார்கள்.

அதற்கு ஜான் ஹஸ் "என்னால் போதிக்கப்பட்ட ஜனங்கள், வேத சத்தியங்களில் தெளிவான உறுதியைப் பெற்றவர்கள்! அவர்கள் கொண்ட உறுதியை நான் நிலை குலையச் செய்வது எப்படி? இவர்களின் ஆவிக்குரிய நன்மையை விட, என் சொந்த சரீரம் ஒன்றும் எனக்கு மதிப்புடையதே அல்ல!" என சிங்கம் போல் கர்ஜனை செய்தார். அவ்வளவுதான், ஹஸ்ஸை ஒரு தீக்கம்பத்தில் வைத்து கட்டினார்கள். அங்கு கூடியிருந்த திரளான ஜனங்களைப் பார்த்து : "அன்று என் உதடுகளால் போதித்த சத்தியங்களை இன்று என் இரத்தத்தினால் முத்திரை இடுகிறேன்!!" என எதிரொலித்தார்!! அவ்வளவுதான், விறகுக்கட்டைகள் ஆக்ரோஷமாய் எரிந்தது! உடல் கருகும் அதே நேரத்தில், ஜான் ஹஸ் பாடிய கெம்பீரப் பாடல் தொனி விண்ணைப் பிளந்து ரீங்கரித்தது!!

*- கர்த்தரின் தீபங்கள்*

## ஓ வாலிபனே, இந்த உலகத்தின் மேன்மை குப்பை என அறிந்திடு!

ஒரு விடுமுறையின் காலைப்பொழுதில் துருக்கி அருகிலுள்ள மின்னிஸோட்டா நகரத்தின் ஏரிக்கரையில் என்னுடைய காரில் உட்கார்ந்து கொண்டிருந்தேன். உலகத்தை தேவனுடைய மாட்சிமையான சிருஷ்டிப்பின் மகிமை நிறைத்திருப்பதைக் குறித்த பரவச எண்ணங்கள் அப்பொழுது என் உள்ளத்தில் எழுந்து கொண்டேயிருந்தன. நான் காரில் உட்கார்ந்து கொண்டிருந்த இடத்திற்குச் சிலஅடிகள் தூரத்தில், ஒரு பெரிய உலோகப்பெட்டி வைக்கப்பட்டிருந்தது. அதின்மேல் "குப்பை மட்டுமே" என்ற எழுத்துக்கள் துலாம்பரமாக எழுதப்பட்டிருந்தன. அந்தப் பெட்டி குப்பைக் கூழங்கள் போடப்படுவதெற்கென்று குறிக்கப்பட்டு, அங்கே வைக்கப்பட்டிருந்தது. ஆனால் "குப்பை மட்டுமே" என்ற வார்த்தைகளை நான் தியானிக்கத் தொடங்கியபோது அது ஒரு விஸ்தாரமான சத்தியத்தை எனக்கு கற்பித்தது.

உலகத்திற்கு இயேசுவின் மகிமையான சுவிசேஷத்தை எடுத்துச் செல்லும் பணியுடன் ஒப்பிடும்போது, மாயலோகம் அனைத்தின் மீதும் மேற்கண்ட "குப்பை மட்டுமே" என்ற வார்த்தைகள் எழுதப்பட வேண்டியதன் அவசியத்தை நான் உணர்ந்து கண்டுகொண்டேன்!

கிறிஸ்தவனே, நீ இயேசுவை உன் சொந்த இரட்சகராகவும், ஆண்டவராகவும் ஏற்றுக்கொண்டது உண்மையானால் 'இந்த பதத்தை' இந்த மணித் துளியிலிருந்து உன்னுடன் எடுத்துச் செல்! "குப்பை மட்டுமே" என்ற பதத்தை, உன்னுடைய மிக அன்பான உடைமைகள் அனைத்தின் மீதும் எழுதிவிடு! அந்த வார்த்தையை உனது வீட்டின் மீதும்.... உனது காரின் மீதும்... உனது விலையுயர்ந்த வஸ்திரங்கள் மீதும்... உனது காசோலைப் புத்தகத்தின் மீதும் (CHEQUE BOOK).... உனது இன்சூரன்ஸ் பாலிசி மீதும்.... உனது பண்டம் பாத்திரங்கள் மீதும் எழுதிவிடு! அந்த அர்த்த புஷ்டியுள்ள, அற்புதமான பதத்தின் வார்த்தைகளை உனது இருதயத்தினைக் கவர்ந்த ஆரணங்கின் மீதும், உனது மனைவியின் மீதும், உனது கணவன் மீதும், நீ பாசமாக நேசிக்கின்ற உனது பிள்ளைகள் மீதும் 'அழுத்தி அழகுறத்' தெளிவாக எழுதிவிடு!!

இந்தக் காரியங்களை எல்லாம், மாந்தர் தங்களுக்கென மிக அன்புடன் பற்றிக் கொண்டுள்ள போதிலும், அவைகள் இயேசுவின் மகிமையான சுவிசேஷத்திற்கும், அவரது சாயலை அணியும் ஜீவியத்திற்கும் முன்பாக 'குப்பை மட்டுமே'. நித்திய அன்பரின் பாதங்களை பாசமுடன் பற்றிக்கொள்ள தடை செய்யும், உலகத்தின் மீதுகொண்ட சகல பாசமும், குப்பை.... வெறும் குப்பை என்பதை இன்றாவது அறிந்துகொள்ளுங்கள். இந்த அருமையான பரலோக சத்தியத்தை நாம் துணிவுடன் சிந்தித்து தியானித்து ஆண்டவருக்கு நாம் கீழ்ப்படிவோமாக! நம்மை முற்றிலுமாய் அவருக்கே அர்ப்பணிப்போமாக!!

*- சுவிசேஷ மலர்*

பரலோக பொக்கிஷங்கள்
Published by MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society.
Printed by The Orient Litho Press, Sivakasi. Editor T.Rathnakumar, Madurai.